1990 ஏப்ரல் 9]

9.20 மணி

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் புதிதாகத் தொடங்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், பழைய தாலுக்கா அலுவலகக் கட்டிடத்தில் இருப்பதால் இட நெருக்கடியாலும், அதிக அளவு பொதுமக்களுக்கு வசதியில்லாத நிலை இருப்பதால் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டிடம், நகராட்சிக் குடிதண்ணீர் கிடைக்கக்கூடிய இடமாகப் பார்த்துத் தேர்வு செய்து, புதிய கட்டிடம் கட்ட அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : ஏற்கெனவே நான் பதில் சொன்னேன். அந்தப் பரிசீலனை அரசிடம் இருக்கிறது. அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் கேட்டிருக்கிறோம்.

புளியந்தோப்பு வழியாக மயிலை, அடையாறு செல்ல பேருந்து வசதி.

*2625 திரு. அ. இரகுமான்கான் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பூங்கா நகர் தொகுதி, புளியந்தோப்பு வழியாக மயிலை, அடையாறு செல்ல பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, புளியந்தோப்பு காவல் நிலையம் வழியாக மயிலைக்கு செல்ல பி.62 தடமும் புளியந்தோப்பு காவல் நிலையம் வழியாக அடையாறு செல்ல ஏ.29 தடமும் ஏற்கனவே பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படுவதால் புளியந்தோப்பு வழியாக மயிலை, அடையாறு செல்ல புதிய பேருந்து வசதி செய்யத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே, பூங்கா நகர் தொகுதியில் இருக்கும் மக்கள் சென்னை நகரத்தினுடைய மையப் பகுதியான மயிலாப்பூர், தியாகராய நகர் போன்ற பகுதிகளுக்குப் பஸ்களில் பயணம் செய்வதற்குப் போதுமான வசதிகள் இல்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் இப்பொழுது, பூங்கா நகர் தொகுதி மக்கள் செல்வதற்குப் புளியந்தோப்பு நெடுஞ்சாலைக்கு முன்னால் இருக்கக்கூடிய காவல் நிலையத்தின் வழியாகப் பஸ்கள் விடப்பட்டிருப்பதாக சொல்கிறார்கள். ஆனால், எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவலின்

அடிப்படையில், பட்டாளம் பக்கத்திலேதான், பெரம்பூரிலிருந்து, எழும்பூர் வழியாக செல்வதற்குத் தான் அந்தப் பஸ்கள் செல்கின்றனவே தவிர, பூங்கா நகரிலிருந்து நேரடியாகச் செல்வதற்கு பஸ் வசதிகள் இல்லை. எனவே, இதைச் சரி செய்து மீண்டும் விடப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் இதுபற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்து, தொகுதியில் இருக்கக்கூடிய மக்களினுடைய நலன்களைக் கருதி, பஸ்கள் விடுவதற்கு அதிகாரிகளோடு ஆலோசனை செய்தார்கள், அந்த அடிப்படையிலே, பெரம்பூர் சூளை நெடுஞ்சாலை, சென்ட்ரல், பாய்க்கடை, குறளகம் வழியாகப் பாரிஸ் கார்னர் செல்வதற்கு ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் பஸ் விடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே. சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் கூட்டம் இரண்டு முறை, பல்லவன் போக்குவரத்துக் கழக சார்பிலே நடத்தப்பட்டது, ஏராளமான ஆலோசனைகள் சட்டமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டு, அவைகளெல்லாம் முப்பது நாள் இடைவெளியில் பரிசீலனை செய்யப்பட்டு எந்தெந்த வழித்தடங்களிலே புதிய பேருந்துகள், விடுவது, ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கின்ற வழித்தடங்களை மாற்றி விடுவது போன்றவை சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு திரு. இரகுமான்கான் அவர்கள் கேட்கின்ற குறிப்பிட்ட வழித்தடத்தைப் பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. அவருடைய கருத்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகரத்தில் சில பகுதிகள் வழியாகப் பேருந்துகள் செல்வதற்காக ஏதேனும் அரசிடம் நிபந்தனை குறிப்புகள் உள்ளனவா என்று அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மக்களுடைய தேவையை அனுசரித்துப் பேருந்து விடப்படும், அதுதான் நிபந்தனை.